பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 7

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 15

1 நற்செயல்கள் ஏற்கப்படுவதற்கு நிபந்தனைகள் உண்டு 17

2 முகஸ்துதியின் வகைகள் 58

3 முகஸ்துதி, இணைவைப்பு போன்று தோன்றுபவை. ஆனால், யதார்த்தம் அவ்வாறல்ல 60

4 செயல்களில் உளத்தூய்மையாக இருப்பதன் சிறப்புகள் 64

5 முகஸ்துதிக்கான நிவராணமும் அதிலிருந்து விலகியிருத்தலும் 89

6 ஷைத்தான் வெருண்டு ஓடும் காரியங்கள் 122

7 உளத்தூய்மையினால் விளையும் பலன்கள் 135

8 முகஸ்துதியால் விளையும் கேடுகள் 142

9 உளத்தூய்மை இருப்பதாகக் கருதப்படும், அவ்வாறு இருக்காது 148

10 உளத்தூய்மை, முகஸ்துதி குறித்த நபிமொழிகள் ஸஹீஹ் அத்தர்கீப் வத்தர்ஹீப் நூலிலிருந்து 151

11 உளத்தூய்மை குறித்த பொன்மொழிகள் 156

12 முன்சென்ற நல்லோரின் கூற்றுகள் 157

வும் அல்லாஹ்டைய தூதர் ﷺ அவர்களின் வழிமுறையின்படி சரியான அடிப்படையிலும் இருப்பது அவசியமாகும். இது போன்ற கருத்தை அல்காழீ இயாழ் ﷺ அவர்கள் உள்ளிட்ட சிலர் கூறியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.'

மனத்தூய்மைக்கான கட்டளையும் முகஸ்துதி, இணைவைப்புக் குறித்த எச்சரிக்கையும்

என்னருமை முஸ்லிம் சகோதர சகோதரிகளே!

கவனமாகக் கேளுங்கள்: செயல்களுக்கு நிய்யத் அவசியமாகும். நிய்யத் என்றால் உள்ளத்தில் தீர்மானம் செய்தல், எண்ணம்வைத்தல் என்று பொருள்.

إِنَّمَا الْأَعْمَالُ بِالنِّيَّاتِ وَإِنَّمَا لِكُلِّ امْرِئٍ مَا نَوَى

'செயல்களெல்லாம் எண்ணங்களைப் பொறுத்தே. ஒவ்வொரு மனிதருக்கும் அவர் எண்ணியதே பலனாகக் கிடைக்கும்' என்று அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள். *(அறிவிப்பு: உமர் இப்னு அல்கத்தாப் ﷺ, புகாரீ 1, முஸ்லிம் 1907)*

وَمَا أُمِرُوا إِلَّا لِيَعْبُدُوا اللَّهَ مُخْلِصِينَ لَهُ الدِّينَ حُنَفَاءَ وَيُقِيمُوا الصَّلَاةَ وَيُؤْتُوا الزَّكَاةَ وَذَٰلِكَ دِينُ الْقَيِّمَةِ

அல்லாஹ்வுக்கே மார்க்கத்தைத் தூய்மைப்படுத்தியவர்களாகவும் இஸ்லாமிய மார்க்கத்தில் உறுதிமிக்கவர்களாகவும் இருக்கின்ற நிலையில் அல்லாஹ்வை அவர்கள் வணங்க வேண்டும் என்பதைத் தவிர வேறு கட்டளை அவர்களுக்கு இடப்படவில்லை. மேலும், அவர்கள் தொழுகையைக் கடைப்பிடித்து, ஸகாத்தும் கொடுத்துவரும்படியே தவிர வேறெதுவும் அவர்களுக்குக் கட்டளையிடப்படவில்லை. இதுதான் நிலையான சட்டங்களுடைய மார்க்கம் *(98:5)*

தைமிய்யாவின் மாணவர்களில் ஒருவர். இவரின் குர்ஆன் விரிவுரை (தஃப்சீர்) இஸ்லாமிய வரலாற்றில் மிகவும் பிரசித்தி பெற்ற முதல் தரமான விரிவுரை. இவரின் 'அல்பிதாயா வந்நிஹாயா' எனும் வரலாற்று ஆராய்ச்சி நூல், உலகத்தின் தோற்றம் முதல் அவர் வாழ்ந்த காலம் வரையிலான இஸ்லாமிய வரலாற்றை விரிவாகக் கூறுகிறது. ஹிஜ்ரீ 774 (கி.பி. 1372) ஷஅபான் திங்கள் 26, வியாழக்கிழமை மரணித்தார்.

3

முகஸ்துதி, இணைவைப்பு போன்று தோன்றுபவை. ஆனால், யதார்த்தம் அவ்வாறல்ல

✿

1. நற்செயல் புரியும் ஒருவரை மக்கள் புகழ்வது

அபூ தர் ﷺ கூறினார்கள்:

قِيلَ لِرَسُولِ اللهِ - صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ -: أَرَأَيْتَ الرَّجُلَ يَعْمَلُ الْعَمَلَ مِنْ الْخَيْرِ لِلهِ فَيَحْمَدُهُ النَّاسُ وَيُثْنُونَ عَلَيْهِ بِهِ قَالَ: تِلْكَ عَاجِلُ بُشْرَى الْمُؤْمِنِ

'ஒரு மனிதர் நற்செயலைச் செய்கிறார். அதற்காக மக்கள் அவரைப் புகழ்கின்றனர். இவர்குறித்து என்ன சொல்கிறீர்கள்' என்று அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கவர்கள், 'அது அல்லாஹ்வை நம்பிக்கைகொண்ட மனிதருக்கு விரைவாகக் கிடைக்கும் நற்செய்தியாகும்' என்று பதிலளித்தார்கள். (அறிவிப்பு: அபூ தர் ﷺ, முஸ்லிம் 2642)

2. வணக்கத்தில் ஈடுபடுவோரைக் காணும் சமயம் ஓர் அடியாருக்கு வணக்கத்தில் உற்சாகம் ஏற்படுவது

அல்மக்திஸி ﷺ அவர்கள் 'முக்தஸரு மின்ஹாஜில் காஸிதீன்' நூலில் (பக். 234) கூறுவதாவது: ஒருவர் வணக்கத்தில் தீவிரமாக ஈடுபடுவோருடன் இரவு தங்க நேரிடலாம். அப்போது, அவர்கள் இரவின் பெரும்பகுதி நேரத்தை தொழுகையில் கழிக்கிறார்கள். ஆனால், அந்த மனிதருடைய வழமை சிறிது நேரம் தொழுவதுதான். அச்சமயத்தில் அவர் அவர்கள் தொழும் அளவுக்குத் தொழுகிறார். அல்லது அவர்கள் நோன்பு நோற்கிறார்கள். அவரும் அவர்களுடன் நோன்பு நோற்கிறார். அவர்கள் இல்லாவிட்டால் அவரிடம் இந்த உற்சாகம் வந்திருக்காது. இதை யாரேனும் முகஸ்துதி என எண்ணி

عَلَيْهِ, وَمَجَّدَهُ بِالَّذِي هُوَ لَهُ أَهْلٌ, وَفَرَّغَ قَلْبَهُ لِلّٰهِ, إِلَّا انْصَرَفَ مِنْ خَطِيئَتِهِ كَهَيْئَتِهِ يَوْمَ وَلَدَتْهُ أُمُّهُ

'உங்களில் ஒருவர் அங்கத்தூய்மை செய்வதற்குத் தண்ணீரை நெருங்கி வாய் கொப்புளித்து (மூக்கிற்கு நீர் செலுத்திமூக்குச் சிந்தினால், அவரது முகம், வாய், மூக்கு ஆகியவற்றால் ஏற்பட்ட பாவங்கள் அனைத்தும் (தண்ணீரோடு சேர்ந்து கீழே) விழுந்துவிடுகின்றன. பிறகு, அவர் அல்லாஹ் உத்தரவிட்டதைப் போன்று தனது முகத்தைக் கழுவினால் அவரது முகத்தால் ஏற்பட்ட பாவங்கள் அனைத்தும் அவரது தாடி ஓரங்களிலிருந்து தண்ணீரோடு சேர்ந்து விழுந்துவிடுகின்றன. பிறகு, அவர் மூட்டுவரை இரு கைகளைக் கழுவும்போது அவருடைய கைகளின் பாவங்கள் அனைத்தும் அவரது விரல் நுனிகளிலிருந்து தண்ணீரோடு சேர்ந்து விழுந்துவிடுகின்றன. பிறகு, அவர் ஈரக் கையால் தலையைத் தடவி (மஸ்ஹு செய்தி)டும்போது அவரது தலையின் பாவங்கள் அனைத்தும் தலைமுடியின் ஓரங்களிலிருந்து தண்ணீரோடு சேர்ந்து விழுந்துவிடுகின்றன. பிறகு, அவர் தன் பாதங்களைக் கணுக்கால்கள்வரை கழுவும்போது அவரது கால்களால் ஏற்பட்ட பாவங்கள் அனைத்தும் அவரது விரல் நுனிகளிலிருந்து தண்ணீரோடு சேர்ந்து விழுந்துவிடுகின்றன. (அதற்குப் பிறகு) அவர் எழுந்து தொழும்போது அல்லாஹ்வை அவனது தகுதிக்கேற்றதைக் கூறிப் புகழ்ந்து பெருமைப்படுத்தித் தனது உள்ளத்தில் இறைவனுக்கு மட்டுமே இடமளித்தால் அவர் திரும்பிச் செல்கையில் அன்று பிறந்த பாலகனைப் போன்று பாவங்கள் நீங்கி (பரிசுத்தமாகத்) திரும்புகிறார்' என்று கூறினார்கள். (அறிவிப்பு: அம்ர் இப்னு அபசா அஸ்ஸுலமீ(ரலி) முஸ்லிம் 832)

4. ஸுஜூதில் உளத்தூய்மை

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

مَا مِنْ عَبْدٍ يَسْجُدُ لِلّٰهِ سَجْدَةً, إِلَّا كَتَبَ اللّٰهُ لَهُ بِهَا حَسَنَةً, وَمَحَا عَنْهُ بِهَا سَيِّئَةً, وَرَفَعَ لَهُ بِهَا دَرَجَةً, فَاسْتَكْثِرُوا مِنَ السُّجُودِ

ஓர் அடியார் அல்லாஹ்வுக்காக ஒரு ஸஜ்தாவை செய்தால், அல்லாஹ் அதன் மூலமாக அவருக்கு ஒரு நன்மையை எழுதி அவரைவிட்டு, ஒரு தீமையை அழித்து, அவருக்கு ஓர் அந்தஸ்தை உயர்த்தாமல் இருப்பதில்லை. எனவே, ஸுஜூதை

أَوَلَيْسَ اللَّهُ بِأَعْلَمَ بِمَا فِي صُدُورِ الْعَالَمِينَ

அல்லாஹ் அகிலத்தாரின் இதயங்களில் இருப்பவற்றை நன்கறி பவனாக இல்லையா? (குர்ஆன் 29:10) என்றும் கூறுகிறான்.

وَمَا يَعْزُبُ عَنْ رَبِّكَ مِنْ مِثْقَالِ ذَرَّةٍ فِي الْأَرْضِ وَلَا فِي السَّمَاءِ وَلَا أَصْغَرَ مِنْ ذَلِكَ وَلَا أَكْبَرَ إِلَّا فِي كِتَابٍ مُبِينٍ

பூயிலோ வானத்திலோ உள்ளவற்றில் ஓர் அணுவளவும் உம் இறைவனுக்குத் (தெரியாமல்) மறைந்து விடுவதில்லை. இதை விடச் சிறியதாயினும் அல்லது பெரியதாயினும் தெளிவானப் பதிவேட்டில் இல்லாமலில்லை (குர்ஆன் 10:61) என்றும் அல்லாஹ் கூறுகிறான்.

அல்லாஹ் உங்களை உற்று நோக்கியவனாக இருக்கும்போது, அல்லாஹ்வைக் கவனத்தில்கொள்ளாது மக்களைக் கவனத்தில் கொள்பவராக உங்களைப் பார்க்கிறேனே! அந்தப் பரிசுத்தவாளன் உம்மை உற்று நோக்கியவாறு இருப்பது உமக்குப் போதுமானதாக இல்லையா? அல்லாஹ் கூறுகிறான்:

أَلَيْسَ اللَّهُ بِكَافٍ عَبْدَهُ

அல்லாஹ்வே அவனுடைய அடியாருக்குப் போதுமானவன் அல்லவா? (குர்ஆன் 39:36)

(இ) நிச்சயமாக பரிசுத்தவாளனாகிய அல்லாஹ் மகத்துவமிக்கவன். உங்கள் உள்ளமும் மனமும் அவனை மகத்துவப்படுத்தட்டும். அவனது படைப்பில் வெளிப்படும் அவனுடைய மகத்துவத்தை கீழ்வரும் சில நபிமொழிகள் வாயிலாகப் புரியலாம்:

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

إِنِّي أَرَى مَا لَا تَرَوْنَ، وَأَسْمَعُ مَا لَا تَسْمَعُونَ، إِنَّ السَّمَاءَ أَطَّتْ، وَحَقَّ لَهَا أَنْ تَئِطَّ، مَا فِيهَا مَوْضِعُ أَرْبَعِ أَصَابِعَ إِلَّا وَمَلَكٌ وَاضِعٌ جَبْهَتَهُ سَاجِدًا لِلَّهِ، وَاللَّهِ لَوْ تَعْلَمُونَ مَا أَعْلَمُ لَضَحِكْتُمْ قَلِيلًا، وَلَبَكَيْتُمْ كَثِيرًا، وَمَا تَلَذَّذْتُمْ بِالنِّسَاءِ عَلَى الْفُرُشَاتِ، وَلَخَرَجْتُمْ إِلَى الصُّعُدَاتِ، تَجْأَرُونَ إِلَى اللَّهِ

நிச்சயமாக நீங்கள் பார்க்காததை நான் பார்க்கிறேன். நீங்கள் செவியேற்காததை நான் செவியேற்கிறேன். வானம் இரைகிறது; இரைவது அதற்குத் தகுமானதுதான். வானத்தில் நான்கு விரல்

வெறுப்பதைக் கனவில் கண்டால், விழித்தும் மூன்று தடவை துப்பட்டும்; அதன் தீங்கிலிருந்து (அல்லாஹ்விடம்) பாதுகாவல் தேடட்டும்; அப்போது, அது அவருக்குத் தீங்களிக்காது.

(இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்களில் ஒருவரான) அபூ ஸலமா கூறுகிறார்: நான் இந்த நபிமொழியைச் செவியுற்றப் பின் எனக்கு மலையைவிடக் கனமாகத் தோன்றும் ஒரு கனவை நான் கண்டாலும் அதை நான் பொருட்படுத்தமாட்டேன். (அறிவிப்பு: அபூ கத்தாதா ﷺ, புகாரீ 5747, முஸ்லிம் 2261)

மேலும், அபூ ஸலமா ﷺ அறிவிக்கிறார்கள்:

لَقَدْ كُنْتُ أَرَى الرُّؤْيَا فَتُمْرِضُنِي، حَتَّى سَمِعْتُ أَبَا قَتَادَةَ، يَقُولُ: وَأَنَا كُنْتُ لَأَرَى الرُّؤْيَا تُمْرِضُنِي، حَتَّى سَمِعْتُ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ: الرُّؤْيَا الحَسَنَةُ مِنَ اللَّهِ، فَإِذَا رَأَى أَحَدُكُمْ مَا يُحِبُّ فَلاَ يُحَدِّثْ بِهِ إِلَّا مَنْ يُحِبُّ، وَإِذَا رَأَى مَا يَكْرَهُ فَلْيَتَعَوَّذْ بِاللَّهِ مِنْ شَرِّهَا، وَمِنْ شَرِّ الشَّيْطَانِ، وَلْيَتْفِلْ ثَلاَثًا، وَلاَ يُحَدِّثْ بِهَا أَحَدًا، فَإِنَّهَا لَنْ تَضُرَّهُ

நான் பல கனவுகளைக் கண்டு அதனால் உடல்நலம் பாதிக்கப் பட்டுவந்தேன். இறுதியில் அபூ கத்தாதா ﷺ அவர்கள் (இவ்வாறு) கூற கேட்டேன்: நானும் பல கனவுகளைக் கண்டு உடல் நலம் பாதிக்கப்பட்டுவந்தேன். இறுதியில் நபி ﷺ அவர்கள், 'நல்ல கனவு அல்லாஹ்விடமிருந்து வருவதாகும். எனவே, உங்களில் ஒருவர் தாம் விரும்புகிற கனவொன்றைக் கண்டால் தன் நேசத்துக் குரியவரைத் தவிர வேறெவரிடமும் அதைப் பற்றித் தெரிவிக்க வேண்டாம். மேலும், அவர் தாம் விரும்பாததைக் கண்டால் அந்த கனவின் தீமையிலிருந்தும் ஷைத்தானின் தீங்கிலிருந்தும் அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோரி (தம் இடப் பக்கத்தில்) மூன்று முறை துப்பட்டும். அந்தக் கனவைப் பற்றி எவரிடமும் தெரிவிக்க வேண்டாம். (அவ்வாறு செய்தால்) அது அவருக்கு எந்தப் பாதிப்பையும் ஒருபோதும் ஏற்படுத்திட முடியாது' என்று கூறியதைக் கேட்டேன். (புகாரீ 7044, முஸ்லிம் 2261)

4. வீட்டிலிருந்து வெளியேறும்போது, பிஸ்மில்லாஹி தவக்கல்த்து என்று கூறுவது

இது குறித்த நபிமொழி வருமாறு:

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

நான் இஷாத் தொழுகை தொழுவிக்கும்போது முதல் இரண்டு ரக்அத்துகளில் நீளமாக ஓதியும் பின் இரண்டு ரக்அத்துகளில் சுருக்கமாக ஓதியும் தொழுவிக்கிறேன்' என்று பதிலளித்தார்கள்.

அதற்கு உமர் ﷺஅவர்கள், 'உங்களைப் பற்றி (நமது) எண்ண மும் அதுவே' என்று கூறினார்கள். இதையொட்டி உமர் ﷺ அவர்கள் ஒருவரை அல்லது சிலரை ஸஅதுஅவர்களுடன் கூஃபாவுக்கு அனுப்பிவைத்து, ஸஅது ﷺ அவர்கள்குறித்துக் கூஃபாவாசிகளிடம் விசாரணை நடத்தினார்கள். விசாரிக்கச் சென்றவர் கூஃபாவாசிகளிடம் விசாரனை மேற்கொண்டார். (கூஃபாவிலிருந்த) ஒரு பள்ளிவாசல் விடுபடாமல் எல்லாவற்றி லும் அவரைப்பற்றி விசாரித்தார். அனைவரும் ஸஅது ﷺ அவர்களை மெச்சி நல்லவிதமாகவே கூறினர். இறுதியில் (பிரபல கைஸ் குலத்தின் பிரிவான) பனூ அப்ஸ் குலத்தாரிடம் அவர் விசாரித்தபோது அந்தக் குலத்தைச் சேர்ந்த அபூ சஅதா எனும் குறிப்புப் பெயர்கொண்ட உஸாமா இப்னு கத்தாதா என்பவர் எழுந்து, எங்களிடம் நீங்கள் வேண்டிக் கொண்டதன் பேரில் நான் (எனது கருத்தைக்) கூறுகிறேன்: ஸஅது அவர்கள் (தாம் அனுப் பும்) படைப்பிரிவுடன் தாம் செல்லமாட்டார். (பொருள்களை) சமமாகப் பங்கிடமாட்டார். தீர்ப்பளிக்கும்போது நீதியுடன் நடக்கமாட்டார்' என்று (குறை) கூறினார்.

இதைக் கேட்ட ஸஅது ﷺ அவர்கள், 'அறிந்துகொள்ளுங்கள்: அல்லாஹ்வின்மீது சத்தியமாக! மூன்று பிரார்த்தனைகள் நான் செய்யப்போகிறேன்' என்று கூறிவிட்டு, 'இறைவா! உன்னுடைய இந்த அடியார் (என்னைப் பற்றிக் கூறிய அவருடைய குற்றச் சாட்டில்) பொய் சொல்லியிருந்தால் பகட்டுக்காகவும் புகழுக் காகவும் அவர் இவ்வாறு குறைகூற முன்வந்திருந்தால் அவரு டைய வாழ்நாளை நீட்டி (அவரைத் தள்ளாமையில் வாட்டி) விடுவாயாக; அவரது ஏழ்மையையும் நீட்டுவாயாக; அவரைப் பல சோதனைகளுக்கு ஆளாக்குவாயாக' என்று பிரார்த்தனை புரிந்தார்கள்.

இதன் அறிவிப்பாளரான அப்துல் மலிக் இப்னு உமைர் ﷺ அவர் கள் கூறுகின்றார்கள்: பின்னர் (ஸஅது அவர்கள்மீது பொய்யான குற்றச்சாட்டுகளைச் சொன்ன அந்த மனிதர் பல சோதனைகளுக்கு உள்ளானார்.) அவரிடம் (நலம்) விசாரிக்கப்பட்டால், நான் சோதனைக்குள்ளான முதுபெரும் வயோதிகனாக இருக்கிறேன்;

அஞ்சுகிறேன். (அறிவிப்பு: அனஸ் ﷺ, பைஹகீ 7255, ஸஹீஹ் ஜாமிஃ 5303)

இங்கு ஓர் அழகிய கூற்று நினைவுக்கு வருகிறது. அது: எவர் தனது உளத்தூய்மையில் கலப்பற்றத்தன்மை இருப்பதாகக் காண்கிறாரோ, அவரது உளத் தூய்மைக்காகக் கலப்பற்றத் தன்மை தேவைப்படுகிறது.

7. விருந்துக்கு அழைப்பவரின் அழைப்பை ஏற்பதில் ஆர்வம் ஏற்படலாம். இது போன்ற விருந்துகளில் பரிமாறப்படும் உணவு பற்றி அறிந்திருப்பதே அதற்குக் காரணமாக இருக்கும். அந்த நேரத்தில் தன் வீட்டு உணவைவிட அது நல்லதாகவும் சிறந்ததாகவும் இருக்கும் என்று தெரிந்திருப்பதும் அதற்குக் காரணமாக இருக்கும். எனவே, உணவின் மீதுள்ள விருப்பமே அவர் விருந்து அழைப்பை ஏற்பதற்கு உந்துதலாயிருக்கும். விருந்துக்கு அழைப்பவருக்குப் பதிலளிப்பதால் அல்லாஹ்வுக்கு வழிப்பட வேண்டும் என்ற எண்ணம் மனதில் தோன்றாது. (இதுவும் உளத்தூய்மை இல்லாத நிலையாகிறது.)

8. அல்லாஹ்வின் விசயத்தில், தான் மிகவும் நேசிக்கும் தனது சகோதரர்களில் ஒருவரை சந்திப்பதில் ஆர்வம் ஏற்படலாம். எனினும், அந்தச் சந்திப்பின் போது அவருக்கு வழங்கப்படும் பல வகைப் பானம், உணவு, இனிப்பு ஆகியவற்றை ருசிக்க வேண்டுமென்ற மறைவான ஆசை அவர் மனதில் இருந்து கொண்டிருக்கும். (இதுவும் உளத்தூய்மை இல்லாத நிலை யாகிறது.)

நான் இப்னுல் முபாரக்[24] ﵀ அவர்களுடன் (ஓரிடத்தில்) இருந்து கொண்டிருந்தேன். அப்போது, குடிநீர் பரிமாறும் இடத்துக்கு நாங்கள் சென்றோம். அங்கு மக்கள் தண்ணீர் குடித்துக்கொண்டி ருந்தார்கள். இப்னுல் முபாரக் ﵀ தண்ணீர் குடிப்பதற்காக அவ்விடத்தை நெருங்கினார்கள். அங்கிருந்த மக்கள் அவர்களை அறிந்திருக்கவில்லை. அதனால் அவர்களை நெருக்கித் தள்ளி னார்கள். (அங்கிருந்து வெளியே வந்தபோது) 'வாழ்க்கைஎன்பது இப்படித்தானே தவிர வேறொன்றும் இல்லை' என்று என்னிடம் கூறினார்கள். அதாவது நம்மைப் பற்றிய அறிமுகமில்லாத இடத்தில் நமக்கு மரியாதை செய்யப்படுவதில்லை.

3. நுஐம் இப்னு ஹம்மாத்[25] ﵀ அவர்கள் கூறினார்கள்:

அப்துல்லாஹ் இப்னு அல்முபாரக் ﵀ அவர்கள், அதிகமாக வீட்டிலேயே அதிக நேரம் இருப்பதால், 'நீங்கள் வெறுமையை உணரவில்லையா?' என்று அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற் கவர்கள், 'நான் நபி ﷺ அவர்களுடன் இருக்கும் நிலையில் எப்படி வெறுமையை உணர்வேன்' என்று கூறினார்கள். (அதாவது, நபிமொழிகளைப் படித்துக்கொண்டிருப்பேன் என்பது கருத்து)

4. அப்தா இப்னு சுலைமான் ﵀ அவர்கள் கூறினார்கள்: நாங்கள் ரோம் தேசத்தில் அப்துல்லாஹ் இப்னு அல்முபாரக் அவர்களுடன் ஒரு படையில் இருந்துகொண்டிருந்தோம். அப்போது, எதிரி களை நாங்கள் திடீரென எதிர்கொள்ளும் சூழ்நிலை ஏற்பட்டது. இரு அணிகளும் (களத்தில்) சந்திக்கத் தயாரான போது, எதிரிப் படையிலிருந்து ஒரு மனிதன் வெளியே வந்து தன்னுடன்

---

24 அப்துல்லாஹ் இப்னு அல்முபாரக் இப்னு வாளிஹ் ﵀ ஆகிய இவர்கள், ஹிஜ்ரீ 118 (கி.பி. 736)இல் பிறந்தார்கள். ஹதீஸ் துறையில் முன்னோடியாகத் திகழ்ந்ததுடன், நம்பகமான உறுதியான நினைவாற்றல் கொண்டவராக விளங்கினார்கள். சுமார் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஹதீஸ்களை எழுதி வைத்திருந்த இவர்கள், ஹிஜ்ரீ 181 (கி.பி. 797)இல் மரணித்தார்கள்.

25 நுஐம் இப்னு ஹம்மாது ﵀ அவர்கள் இமாம் புகாரீ ﵀ அவர்களின் ஆசிரியராவார். இமாம்கள் இப்றாஹீம் இப்னு ஸஅது, சுஃப்யான் இப்னு உயைனா, அப்துல்லாஹ் இப்னுல் முபாரக், அப்துல்லாஹ் இப்னு வஹப், அப்துற்றஸ்ஸாக் இப்னு ஹம்மாம், வகீஃ இப்னுல் ஜர்ராஹ், யஹ்யா இப்னு சாது அல்கத்தான் ﵀ போன்ற பலரிடமிருந்து ஹதீஸ்களை அறிவித்துள்ளார்கள். ஹிஜ்ரீ 228 (கி.பி. 843)இல் இராக்கில் இறந்தார்கள்.